விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 190 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு ஆதரவு

### ஜனாதிபதியிடம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஐ.நா.

15ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச தரத்தில் உள்நாட்டு பொறிமுறை

### ஊடகவியலாளர் சந்திப்பில் மனித உரிமை ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விவகாரங்களிற்கு தீர்வைக் காண்பதற்காக சர்வதேச தரத்திலான உள்நாட்டு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தின் முடிவில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,


மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான

16ஆம் பக்கம் பார்க்க

## குழந்தை உட்பட

# 3 எலும்புக்கூடுகள் செம்மணியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)



குழந்தை உட்பட 3 எலும்புக்கூடுகள் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் முதல் நாளான நேற்று மீட்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழையில் நீரில் மூழ்கிய இளைஞன் மரணம்

### நீந்திக் கொண்டிருந்தபோது வலிப்பு ஏற்பட்டதால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் நீர்த்தொட்டியில் நீந்திக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் வலிப்பு ஏற்பட்ட நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்

15ஆம் பக்கம் பார்க்க

### அச்சுவேலி தோப்புப் பகுதியில்

## கிணற்றில் விழுந்த 10 வயதுச் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்புப் பகுதியில் கிணற்றில் தவறிவிழுந்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத சட்டத்தை இரத்து செய்து கைதிகளை விடுவிக்குக

### அரசிடம் வோல்கர் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்து நீண்ட காலமாகத் தடுப்பில் உள்ள கைதிகளை விடுவிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை (26) பிற்பகல் இலங்கைக்கான தனது விஜயத்தின் முடிவில் சிறப்பு

16ஆம் பக்கம் பார்க்க




## தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது உறுதி

### தமிழ் எம்.பிக்களிடம் ஐ.நா ஆணையாளர்



15ஆம் பக்கம் பார்க்க




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 - 11 - 1964



மறைவு
26 - 06 - 2025

**வேலாயுதம் தர்மகுலசிங்கம் [அப்பன்]**
(ஓய்வுபெற்ற ஊழியர் யாழ். பல்கலைக்கழகம்)

கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தர்மகுலசிங்கம் அவர்கள் 26.06.2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 775 1399

தில்லையம்பதி,
கோண்டாவில்.

(C-3274)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சோதிலிங்கம் ஜெயானந்தன்
எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி இன்றைய தினம் யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் அதிபராகக் கடமையேற்கின்றார்.



திருமதி. தர்மினி நாகச்செல்வம்
எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி இலங்கை ஆசிரியர் கல்வியியலாளராக (SLTES -III) பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இருவரும் மேலும் உயர் பதவிகளைப் பெற்று சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிக் கழகம், பாடசாலைச் சமூகம்
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(4645)

## காணாமல்போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகளில் முன்னேற்றம் - ஐ.நா

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் தன்னால் முன்னேற்றத்தை அவதானிக்கமுடிவதாக அந்த அலுவலக அதிகாரிகளிடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

ஐ.நா உயர்ஸ்தானிகர் நீதி அமைச்சு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது உயர்ஸ்தானிகருக்கும் அரச கட்டமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் உள்ளக நல்லிணக்க செயன்முறை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாகக் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளிடம் வினவிய உயர்ஸ்தானிகர், குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் செயற்பாடுகளை செயற்திறன்மிக்கவகையில் முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் எவ்வாறான உதவிகளை வழங்கமுடியும் என்றும் கேட்டறிந்தார். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 01 - 1953



மறைவு
25 - 06 - 2025

**செல்லத்தம்பி ரவீந்திரன்**
(உரிமையாளர் - R.V TEX R.S TEX யாழ்ப்பாணம்)

புதிய வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி ரவீந்திரன் (25.06.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி - ஞானாம்பிகை தம்பதியரின் மருமகனும் திலகவதி (பவானி) அவர்களின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (கனடா), பாமினி (லண்டன்), பிருந்தன், சுதாகர் (அமரர்), விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமினி, ராஜ்குமார், ராதா, தாரகா, கரிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அப்சனா, அபிஷாந், அக்ஷயன், அஸ்மிதன், லெசிகா, டயானிக்கா, சிவாஜினி, கரிராம், கர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் மகேந்திரராஜா (அமரர்), தர்மபாஸ்கரன் (அமரர்), உஷாதேவி (அமரர்), நகேஸ்வரன், கலாதேவி, பிரபாகரன் (அமரர்), சதாகரன், சிறிதரன், கெங்காதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஞானரூபன், பிரதீபன், கோகுலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்

(4644)






நாட்டிய கலாகேந்திரா

உடுவில் நடனப் பயிலக மாணவியும்
ஸ்தாபக இயக்குனர் கலாநிதி (முனைவர்) கிருஷாந்தி இரவீந்திரா
அவர்களின் பேர்த்தியும்
நாட்டியகுரு
ஆய்வியல் நிறைஞர் திருமதி துஸ்யந்தி சுகுணன்
அவர்களின் மகளும் மாணவியுமான
செல்வி விஜியந்தி சுகுணன் அவர்களின்

பரதநாட்டிய அரங்கேற்றம்





தலைமை
கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

பிரதம விருந்தினர்
கலைமாமணி ஸ்ரீமதி ஊர்மிளா சத்தியநாராயணன்
தேசிய விருதாளர், கலை இயக்குனர் "நாட்டிய சங்கல்பா"

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் சி. சிறிசற்குணராசா
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஸ்ரீ.ச.சாய் முரளி
இந்திய துணைத்தூதுவர்,
யாழ் இந்திய துணைத்தூதரகம்.


முனைவர் செ. கற்பகம்
இணைப்பேராசிரியர் இசைத்துறை, இயக்குனர் - கல்விநிலை ஆய்வு இயக்கம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கௌரவ விருந்தினர்கள்
கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
இயக்குனர், கலாபவனம் கொக்குவில்.
கலாபூஷணம் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார்
இயக்குனர், கலைக்கோயில் உரும்பிராய்.
கலாசூரி ஸ்ரீமதி. வாசுகி ஜெகதீஸ்வரன்
இயக்குனர், நாட்டிய கலா மந்திர் கொழும்பு.

இடம் : யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்
காலம் : 28.06.2025 சனிக்கிழமை மாலை 3.00 மணி

(C-3276)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந் திர மஹோற்சவம் நேற்று வியாழக் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம் பமாகியுள் ளது. காலை இடம்பெற்ற விசேட பூஜை வழி பாடுகளைத் தொடர்ந்து, கொடியேற்றம் இடம்பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

# போதை எனும் சாக்கடையில் விழாதே!

# சங்கானையில் நேற்று கவனயீர்ப்பு

**(யாழ்ப்பாணம்)**

**சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்றையதினம் சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




போதைப்பொருள் பாவனையானது அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் அதன் தாக்கம் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள் என சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரிடத்திலும் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் குடும்பங்களிடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு போதைப் பொருள் பாவனையில் இருந்து அனைவரையும் மீட்கும் நோக்கில் இந்த விழிப்புணர்வு போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "போதை அற்ற வாழ்வே ஆரோக்கியத்திற்கான வழி, எம் சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவை தானா?, அரசே புதிய மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங் காதே, மது ஒழிப்பில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு கை கொடுப்போம், போதையெனும் சாக்கடையில் விழா தீர்கள்" எனும் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்திற்கு சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தினர், மானிப்பாய் பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸார், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர், அந்திரான் தோற்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கினர். (8-104)



## சாவகச்சேரியில் தொடர்ச்சியாக அகப்படும் மணல் கடத்தல் டிப்பர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் கடத்தல் டிப்பர்கள் அகப்பட்டு வரும் நிலையில் நேற்று வியாழக் கிழமை காலை வேளையும் பொலிஸாரின் சைகையை மீறிச் சென்ற டிப்பர் வாகனம் மற்றும் அதன் சாரதியைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் மூன்று மணல் கடத்தல் டிப்பர்கள் மணலை நிரப்பிக் கொண்டு சென்ற வேளையில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று டிப்பர்களை மறித்துள் ளனர்.

இருப்பினும் பொலிஸாரின் சைகையை மீறி டிப்பர் வாகனங்கள் பயணித்துள்ளன. இந் நிலையில் பொலிஸார் நீண்ட தூரம் டிப்பர் வாகனம் ஒன்றை பின் தொடர்ந்து ஏ9 வீதி நுணாவில் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்தை மடக்கிப் பிடித்து அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது மற்றைய இரண்டு டிப்பர்களும் தப்பித் திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சாரதியிடம் சாரதி அனுமதிப்பத்திரமும் இல்லை எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவி ரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர். சாவகச்சேரிப் பொலிஸார் இவ்வாரம் மாத்திரம் பத்திற்கும் மேற்பட்ட சட்ட விரோத மணல் கடத்தல் டிப்பர்களை குறிப்பிடத்தக்கது. (8-30)

## மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் வர்த்தகக் கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் entrepreneurship glory வர்த்தக் கண்காட்சி இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் யாழ்.வீரசிங்க மண்டப வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் காற்றாழை உற்பத்திகள், தோல்சார் உற்பத்திகள், கைவினை உற்பத்திப் பொருட்கள். உணவுப் பொருட்கள், ஆடை உற்பத்திகள், கடல்சார் உலர் உணவுப் பொருட்கள், சலவை உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள் என்பன காட்சிப் படுத்தி விற்பனைக்காக வைக்கப்படவுள்ளன.

உலக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் தினத்துடன் இணைந்த வகையில் இவ் வர்த்தகக் கண்காட்சியானது மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகப் பங்காளர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மக்கள் வங்கியின் பிராந்திய கடன் பிரிவு அறிவித்துள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளையாட்டுச் செய்திகள்

# தற்காப்புக் கலை போட்டிகளில்

# 30 பதக்கங்களை வென்று

# சாதனை படைத்த விநாயகபுரம் அ.த.க பாடசாலை







வட மாகாண பாடசாலைகளுக்கிடையே வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மல்யுத்தம், யூடோ, தைகொண்டே போட்டிகளில் துணுக்காய் விநாயகபுரம் அ.த.க பாடசாலை 30 பதக்கங்களை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இம்மாதம் 21-23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் இப்போட்டிகள் நடைபெற்றன.

வடமாகாணமட்ட மல்யுத்தம், ஜூடோ, தைகொண்டே போட்டிகளில் இப்பாடசாலையைச் சேர்ந்த 22 மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

இதில் இப் பாடசாலை அணி மொத்தமாக 30 பதக்கங்களை பெற்று வரலாற்று சாதனையை பதிவு செய்தது.

இதில் பங்குபற்றியோர் 11 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலம் உட்பட 30 பதக்கங்களை பெற்று பாடசாலைக்கும் துணுக்காய் வலயத்திற்கும் பெருமையை சேர்த்துள்ளார்கள்.

அத்தோடு பெண்கள் அணியினர் மல்யுத்தப் போட்டியில் மாகாண சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த வருடமும் இப்பாடசாலை 18 பதங்கங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-104)




ரிதுஷன்




நவின்

ஆண்பிள்ளையை
செலவாளியாய்
வளர்க்காதே..!

பெண்பிள்ளையை
செல்லமாய் வளர்க்காதே...

இரண்டுமே அவர்கள்
வாழ்க்கையை பாதிக்கும்..!
கவனம் !!!

- யாரோ

மிதுரா




டிபிஷா

எவ்வளவு சாப்பிட்டாலும்



தங்கச்சிக்கிட்ட இருந்து பிடுங்கி
சாப்பிடுற மாதிரி வரவே வராது

அனோஜா

எத்தனை முறை சண்டை போட்டாலும்
தேடிவந்து பேசும் தெய்வம்



தாயைத் தவிர வேறு யார் உண்டு
இவ் உலகில்...

சானுகா

தத்துவம்: நீ யோசிக்காமல் எடுத்த
அனைத்தும் உன்னை வாழ்நாள்
முழுவதும் யோசிக்க வைத்து விடும்





உண்மை தான் தம்பி... யோசிக்காம
கல்யாணம் பண்ணிட்டு
இப்ப ஏன்டா பண்ணனேன்னு
நினைச்சு அழுகுறேன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவைக்காய் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்

## பருத்தித்துறை நகரசபை தலைவர் வின்னன் டீ போல் டக்ளஸ் போல்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரசபையின் தலைமைப் பதவி எனக்குத் தரப்பட்ட பதவி அல்ல. மக்கள் அளித்த பரிசுத்தமான பதவியாக கருதுகிறேன். இது என் தனிப்பட்ட வெற்றியல்ல. நம்மை ஒட்டுமொத்தமாக முன்னேற்றும் ஒற்றுமை மற்றும் சேவையை நம்பும் ஒவ்வொருவரின் வெற்றியாகும் என பருத்தித்துறை நகர சபையின் தலைவர் வின்னன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகர சபையின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம்பிக்கையையும் அன்பையும் எங்களின் மீது வைத்து என்னை நகராட்சி மன்றத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்கள் பயணத்தில் இன்று புதிய அத்தியாயம் தொடங்குகிறது என நான் நம்புகின்றேன். இது ஒரு பொறுப்பான பதவி மட்டுமல்ல. எமது நகரத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் உங்களுடன் சேர்ந்து பணியாற்றும் ஓர் ஆழ்ந்த வாய்ப்பு. எமது முன்னேற்றத்துக்கும், பங்கேற்புக்கும், கபடமற்ற தெளிவான நிர்வாகத்திற்குமான ஓர் உறுதி.

என்னைப் பொறுத்தவரை தலைமை என்பது ஆட்சி செய்வதற்கான உரிமை மட்டுமல்ல, அது மக்கள் சேவையை நியாயமாக, நேர்மையாக, உறுதியாக வழங்கும் ஒரு கடமையாகும்.


நாம் ஒற்றுமையுடன், ஒரே நோக்கத்துடன் பணியாற்றுவோம். அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி, மக்கள் நலனில் உறுதியாக இருப்போம்.

எமது நகரத்தின் மக்களே எங்கள் நம்பிக்கை. அவர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவோம். திட்டங்கள் மற்றும் பணிகள் மட்டுமல்ல, ஒற்றுமை, கருணை மற்றும் கூட்டு முயற்சியில்தான் நமது வெற்றி உள்ளது.

நமது நகர மக்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டால் மட்டுமே சவால்களை சமாளித்து, வாய்ப்புகளை வளமாக்க முடியும். நாம் அனைவரும் இணைந்து பணியாற்றுவோம். வேறுபாடுகளைத் தாண்டி, புரிதலின் பாலங்களைக் கட்டுவோம்.

எமது பண்பாடுகளை பாதுகாப்பது நமது பலமென்று ஏற்றுக் கொள்வோம். நேர்மை, நியாயம் மற்றும் மரியாதையின் மதிப்பீடுகளை வளர்க்கும் பணியில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தார். (க-நி)

# மாணவர் பாராளுமன்ற அமர்வு



(வவுனியா)

வவுனியா தெற்கு வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள் தெரிவுடன் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் சமூக விஞ்ஞானப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சத்திய மூர்த்தி தலைமையில் குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வவுனியா தெற்கு வலயத் திற் குட்பட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வலயப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களிடத்தில் இருந்து சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர் தெரிவு செய்யப்பட்டு, செங் கோலுடன் பாராளுமன்ற சம்பிர தாய முறைப்படி குறித்த அமர்வு இடம் பெற்றது.

இதில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பிரதி கல்விப் பணிப்பாளர்களான அமல்ராஜ், தட்சாயினி, வீரசிங்கம், வலய கணக்காளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சுபா, வலய ஆசிரிய ஆலோசகர்கள், சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)


மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

திரு. பொன்னம்பலம் சிவனேஸ்வரன்

(பயிற்றப்பட்ட ஆசிரியர் SLTS-I)



அன்புக்குரியவரே
ஆசானே வேலாயுதம் கல்லூரியின் ஆதவனே
இலைமறைகாயாய் ஈரம் கொண்டவரே உத்தமரே
ஊர்போற்றும் பண்பாளனே
என்றும் எம் நெஞ்சங்களில் வாழும்
ஏற்றங்கொண்டவரே
ஐக்கியத்தோடு சேவை செய்தீர்
ஒரு நாளும் மறவாது உம் நாமம்
ஓர் தசாப்தகாலம் செய்த சேவை
இக்கல்லூரியின் பொற்காலமே
போற்றுகின்றோம் உம்மை
தாழாத கீர்த்தியும் தவறாத
சந்தானமும் கொண்டு வாழ்க வாழ்க வாழ்க

சேவை விபரம்
1. யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் (27.10.1997 - 31.01.1999)
2. பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை (01.02.1999-11.01.2001)
3. யா/ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை (12.01.2001-14.05.2013)
4. கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி (15.05.2013-17.05.2015)
5. யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் (18.05.2015-29.06.2025)

(C-3272)

வாழ்த்துவோர்: நலன்புரிச்சங்கம்
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை.


# இராசிபலன்

27.06.2025
ஆனி 13, வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 2.07 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 10.13 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம்

வளவன்

**மேஷம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**: வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கலக்ளில் கவனம் தேவை, போசன சுகமுண்டு, எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.

**துலாம்**: தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்**: நட்பு வட்டம் விரிவடையும் நாள், நிம் மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், வெற்றி வாய்ப்புக்கள் வீடு தேடி வரலாம்.

**கும்பம்**: மறைமுகப் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நம்பிக்கைகள் நடைபெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்**: வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**கன்னி**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோகமான நாள்.

**தனுசு**: மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படநேரிடலாம், திடீர் செலவுகளைச் சந்திக்க நேரிடலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்**: பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

நட்பு என்பது சுக துக்கங்களில் பங்கு கொள்வதாகும்.

noolaham.org | aavanaham.org

# மலேரியா தொற்றுடன் இதுவரை 15 பேர் அடையாளம்!

## வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோரால் ஆபத்து




(கொழும்பு)

**வெளிநாடுகளுக்குச் சென்று மீள நாடு திரும்புவோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மூலம் மீண்டும் மலேரியா பரவ வாய்ப்புள்ளதாக மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்தின் விசேட வைத்திய நிபுணர் இந்தீவரி குணரத்ன குறிப்பிட்டார்.**


அவ்வாறு இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு நோய்த்தொற்றுடன் வருகை தந்த சுமார் 15 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மலேரியா இலங்கையில் இருந்து முழுமையாக ஒழிக்கப்பட்ட நுளம்புகள் மூலம் பரவும் ஒரு தொற்று நோயாகும். எனினும் வருடாந்தம் பல மலேரியா நோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகைத்தந்தவர்களே இவ்வாறு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன், நாட்டில் நோய் முழுமையாக ஒழிக்கப்பட்டிருப்பினும் நோய்க் காவியான நுளம்புகள் பரவியுள்ளமையால் நோயாளர்களிடம் இருந்து ஏனையோருக்கு நோய் பரவ வாய்ப்புள்ளது.

ஆகையால் வெளிநாடு செல்வோர் மலேரியா நோய்க்கான தடுப்பூசியைப் பெறுவது அவசியம் நாடளாவிய ரீதியில் உள்ள மலேரியா கட்டுப்பாட்டு நிலையங்களில் இவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (நி)

# தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி தபோம்பேகி நாட்டை வந்தடைந்தார்



(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி தபோம்பேகி நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இதேவேளை தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்திக்கவுள்ளதுடன் கொழும்பில் இளம் தொழில்முனைவோர் மற்றும் வணிகத் தலைவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுதலையான முன்னாள் அமைச்சரின் மனைவி

## மற்றுமொரு மோசடி அம்பலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவி மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோவின் விடுதலையும், சர்ச்சைக்குரிய ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனியவின் வழக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, 2 பெண்களைக் கடத்திக் கொலை செய்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஜனாதிபதி மன்னிப்பைப் பெற்ற பின்னர், 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டார்.

இது சர்வதேச மகளிர் தினத்துடன் தொடர்புடைய மன்னிப்பாக அறிவிக்கப்பட்டதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் மன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விடுதலை குறித்து அண்மையில் பல சர்ச்சைகள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் தொற்றா நோய்கள்

## சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் சிறுவர்களிடையே தொற்றா நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு நுகர்வில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் பணிப்பாளர் சமூக மருத்துவ நிபுணர் மோனிகா விஜேரத்ன குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றாநோய்கள் சிறுவர்களிடையே பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். (நி)

# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா நேற்றுக் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலம் அளிக்க ஆணையத்தின் முன் முன்னிலையான பின்னர் அவர் காவலில் எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த வழக்கில் சந்திரகுப்தா 2023 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல்லவுடனும் தொடர்புடையது.



அவர் கைது செய்யப்பட்டதற்கான சரியான காரணம் இன்னும் தெரியவில்லை. (நி)

# ஹெகெலிய உள்ளிட்ட 12 பேருக்கு குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல்ல உட்பட 12 நபர்கள் மீது சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற சிறப்பு விசாரணைக் குழு முன்னிலையில் நேற்று குறித்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் ஊசிகளை இறக்குமதி செய்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கடந்த 2024 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தால் ஏழு மாதங்களுக்குப் பிறகு அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.



இதேவேளை- குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில், குறிப்பிட்ட தரமற்ற மருந்தை இறக்குமதி செய்ததன் மூலம் 130 மில்லியன் ரூபா நிதி மோசடி நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (நி)

# இடமாற்றம் செய்யப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள்

(கொழும்பு)

சிறைச்சாலைத் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் பலருக்கும் அவர்கள் பணியாற்றிய இடங்களில் இருந்து அதிரடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு சிறப்பு தர கண்காணிப்பாளர்கள், ஒரு கண்காணிப்பாளர், எட்டு உதவி கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐந்து சிறைச்சாலைகளின் பதில் கண்காணிப்பாளர்கள் ஆகியோர், தற்போது அவர்கள் பணிபுரியும் இடங்களிலிருந்து வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் வடக்கு கிழக்கின் சிறைச்சாலை அதிகாரிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த இடமாற்றங்கள் 2025 ஜூலை 02 முதல் நடைமுறைக்கு வருகின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரைக் கைவிட்டது போன்று மலையகத் தமிழரையும் கைவிடாதீர்கள்!

## ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் மனோ கணேசன் கோரிக்கை

**(கொழும்பு)**

**ஈழத்தமிழ் மக்களைக் கைவிட்டதைப் போன்று, இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழ் மக்களையும் நீங்கள் கைவிட்டு விட வேண்டாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஐ.நா மனித உரிமை ஆணையர் வோல்கர் டர்க்கிடம் தெரிவித்தார்.**



ஐ.நா மனித உரிமை ஆணையர் வோல்கர் டர்க்கிற்கும், எதிர்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பு பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

கடும் யுத்தம் நடந்த போது ஐ.நா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் நடக்க காரணமாக அமைந்துவிட்டது.

இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலையானோர், காணாமல் போனோர் தொடர்பில் பொறுப்பு கூறல் நடைபெறவில்லை.

அரசியல் கைதிகள் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை.

ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐ.நா சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக்கிறார்கள்.

ஈழத் தமிழ் மக்களை கைவிட்டதைப் போன்று, இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழ் மக்களையும் நீங்கள் கைவிட்டு விட வேண்டாம்.

காணி உரிமை, வீட்டு உரிமை, வறுமை, சிசு மரணம், சுகாதாரம், தொழில் நிலைமைகள் என்ற எதுவாக இருந்தாலும், அவை அனைத்திலும் மிகவும் குறை வளர்ச்சி கொண்ட மக்களாக இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் குறிப்பாக, பெருந் தோட்டங்களில் வாழும் மக்கள், இருக்கிறார்கள்.என தெரிவித்துள்ளார். (நி)

# பேருந்து கட்டணங்கள் 2.5 வீதத்தால் குறைப்பு

## போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு


(கொழும்பு)

பேருந்து கட்டணங்களை ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பேருந்து கட்டணங்களை 2.5 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வருடாந்தம் ஜூலை மாதத்தில் பேருந்து கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இந்த வருடத்தின் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் இந்த திருத்தம் நடைமுறைக்கு வருகிறது.

எவ்வாறெனினும் தற்போது நடைமுறையிலுள்ள ஆகக் குறைந்த பேருந்து கட்டணத்தில் எந்த திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி)


கல்வி கற்ற பாடசாலைகள்
- யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - தரம் 1 முதல் தரம் 9 வரை
- மு/வித்தியானந்தா கல்லூரி - தரம் 10 முதல் தரம் 13 வரை

பட்டப்படிப்பு விபரம்
- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்- B.Sc - Phy
- தேசிய கல்வி நிறுவகம் - PGDE

எமது கல்லூரியில் உயர் தர பிரிவில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றி 27.06.2025 இன்று மணி விழாக்காணும் திரு.காசிலிங்கம் ஜெயந்தன் அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

சேவை விபரங்கள்

நிர்வாக உதவியாளர் (Administrative Assistant)
- யா/கொண்டாவில் இந்துக் கல்லூரி (1994.09.07 - 1996.06.15)
- மு/மாங்குளம் மகாவித்தியாலயம் (1996.06.16 - 1997.03.01)

ஆசிரியர் சேவை (க.பொ.த. உ.தர விஞ்ஞானம்)
- மு/மாங்குளம் மகாவித்தியாலயம் (1997.03.02 - 2000.10.01)
- மு/மல்லாவி மத்திய கல்லூரி (2000.10.02 - 2005.05.01)
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி (2005.05.02- 2012.10.19)
- யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர் (2012.10.20 - 2025.06.26)

குரு பிரதீபா பிரபா விருது–2011 (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

(C-3273)

Congratulations

வாழ்த்துவோர்- கல்லூரி நலன்புரிக் கழகம், யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.



லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(2254)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# யாழ்ப்பாணம் மாநகரசபை
# கேள்வி அறிவித்தல்

**நல்லூர் உற்சவகாலத்திற்காக நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல்-2025**

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 'நல்லூர் உற்சவகாலத்தில் வீதித் தடைகளுக்கான பாதுகாப்பு சேவைக்கு நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கு' இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் கேள்விப் படிவங்களை 27.06.2025 தொடக்கம் 11.07.2025 திகதி மு.ப. 10.00 மணி வரையான காலப்பகுதியில் அலுவலக வேலை நாட்களில் யாழ்ப்பாணம் மாநகரசபை, பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை கடித உறையினுள் உள்ளடக்கி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **("நல்லூர் உற்சவகாலத்திற்காக நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல் - 2025")** எனக் குறிப்பிட்டு **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 11.07.2025 மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரில்/ பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

கேள்விகள் 11.07.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**யாழ் மாநகரசபை.**


(சி-3271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# அமெரிக்காவின் தாக்குதலில் அணுசக்தி நிலையங்கள் கடும் சேதம்

## ஒப்புக்கொண்டது ஈரான்



(டெஹ்ரான்)

ஈரான் தனது முக்கிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் நடத்திய தாக்குதல்களால் கடுமையான சேதத்தை சந்தித்ததாக ஒப்புக்கொண்டுள்ளது.

ஈரானில் உள்ள ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று முக்கிய அணுசக்தி நிலையங்களை குறிவைத்து அமெரிக்கா சமீபத்தில் தாக்குதல்களை நடத்தியது.

“ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்” என்று அழைக்கப்பட்ட இந்த தாக்குதல்களில், அமெரிக்கா B-2 ஸ்பிரிட் குண்டுவீச்சு விமானங்கள், சக்தி வாய்ந்த பதுங்கு குழி பஸ்டர் குண்டுகள் மற்றும் டோமா ஹாக் ஏவுகணைகளைப் பயன்படுத்தியது.

இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலும் பங்கேற்றதாக செய்திகள் வந்தன. இந்தத் தாக்குதல்களில் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில் ஒரு செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் ஈரானிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி, “தொடர்ச்சியான தாக்குதல்களால் எங்கள் அணுசக்தி நிலையங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன என்பது தெளிவாகிறது” என்று கூறினார். இருப்பினும், சேதத்தின் முழு விவரங்களையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

ஈரானிய அணுசக்தி அமைப்பு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்கள் தற்போது நிலைமை மற்றும் சேதத்தை மதிப்பிடுவதாக அவர் விளக்கினார்.

மறுபுறம், சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஈராபி அணுசக்தி நிலையங்கள் மீதான அமெரிக்க தாக்குதல்களைக் கையாண்ட விதம் குறித்து ஈரான் ஆழ்ந்த கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அதன் அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்யும் வரை சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடனான ஒத்துழைப்பை நிறுத்தி வைக்க ஈரானிய பாராளுமன்றம் ஒருமனதாக வாக்களித்தது. (நி)

# இராணுவச் செலவீனங்கள் தொடர்பில்

## நேட்டோ மாநாட்டில் ட்ரம்ப் அறிவிப்பு



(நெதர்லாந்து)

அமெரிக்கா உள்ளிட்ட 32 நாடுகள் இணைந்த நேட்டோ அமைப்பின் வருடாந்த மாநாடு நெதர்லாந்து நாட்டின் தி ஹேக் நகரில் நடைபெற்றது.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உட்பட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

குறிப்பாக, நேட்டோ நாடுகளின் இராணுவ செலவினத்தை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும் இதன்போது, உறுப்பு நாடுகள் தங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை இராணுவத்துக்கு செலவிட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி இருந்தார். இது குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

முடிவில் இந்தப் பரிந்துரைக்கு உறுப்பு நாடுகள் ஒப்புதல் தெரிவித்ததுடன் இது தொடர்பாக மாநாட்டு முடிவில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அணுசக்தி ஏ

# உருவாக்கு

## அமெரிக்கா உ

**(வோஷிங்டன்) பாகிஸ்தான் மிகவும் இரக முறையில் கண்டம் விட்டு கண் அணுசக்தி ஏவுகணைகளை உ வருவதாக அமெரிக்க உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.**

இந்த ஏவுகணைகள் 5,500 கி.மீ.க்கும் அதிகமான தூரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவுத்துறை அமைப்பு அறிக்கையில், இந்தியாவின் “ஆப்ரேஷன் சிந்துக்குப் பிறகு, சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் தனது ஆயுதக் களஞ்சியத்தை கணிசமாக அதிகரிக்க முடிவு செய்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, அமெரிக்காவின் பல முக்கிய பகுதிகளை குறிவைக்கும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை பாகிஸ்தான் இரகசியமாக உருவாக்கி வருகிறது.

பாகிஸ்தான் இதுபோன்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை உருவாக்கவோ அல்லது வாங்கவோ முயற்சித்தால், அந்த நாடு எதிரியாகக் கருதப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்ததாக அறிக்கை கூறுகிறது.

அமெரிக்கா, தனது நாட்டிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் அல்லது அணு ஆயுதங்களை வைத்திருக்கும் எந்தவொரு நாட்டையும் அதன் எதிரியாக அறிவிக்கும் என்று அறிக்கை கூறியுள்ளது. தற்போது, ரஷ்யா, சீனா மற்றும் வட கொரியாவை அமெரிக்கா தனது எதிரி நாடுகளாகக் கருதுகிறது.

சிறிது காலமாக, பாகிஸ்தான்



முக்கிய
நடத்தர
உருவா
வருகிற
தற்போ
விட்டு
ணைகள
202
பாகிஸ்
மேற்பர
நிலை ஏ
III ஐயு
இடைநி
கொளரி

# நாய் இறைச்சி விற்பனைக்கு தடைவிதித்த தென்கொரியா

(சியோல்)

நாடு முழுவதும் நாய் இறைச்சியை நுகர்வுக்காக விற்பனை செய்வதைத் தென்கொரியா தடை செய்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய சட்டமூலம் 2024 ஆம் ஆண்டில் வரையப்பட்டு கடந்த ஜனவரி மாதம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

நாய் இறைச்சி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்த தொழில்துறையிலிருந்து வெளியேற 2027 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்
ஈடுபட்டு
குதி போ
நாய்
முக்கிய
கொரியா
முறைக்
நுகர்வுக்
வெட்டு
செய் வ
சட்டங்க
சட்டத்
மூன்று
தண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தி ஏவுகணைகளை ...கும் பாகிஸ்தான்!

## ...ா உளவுத்துறை தகவல்

**...இரகசியமான ...டு கண்டம் பாயும் ...களை உருவாக்கி ...வுத்துறை அமைப்பு**

சோதித்தது.

இதற்கிடையில், ஆப்ரேஷன் சிந்தூரின் போது 450 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் அப்தாலி ஆயுத அமைப்பு ஏவுகணையை (மேற்பரப்பில் இருந்து மேற்பரப்புக்கு தாக்கும் ஏவுகணை) சோதித்ததாக பாகிஸ்தான் அறிவித்தது.

கடந்த ஆண்டு, பாகிஸ்தானின் நீண்ட தூர ஏவுகணைத் திட்டத்தின் மீது அமெரிக்கா பல தடைகளை விதித்தது.

ஏவுகணைத் திட்டத்தை மேற்பார்வையிடும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமான தேசிய மேம்பாட்டு கழகம் மற்றும் மூன்று நிறுவனங்களுடன் வணிகம் செய்வதை அமெரிக்க நிறுவனங்கள் தடை செய்தது.



முக்கியமாக குறுகிய மற்றும் நடுத்தர தூர ஏவுகணைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறது.

தற்போது அந்நாட்டிடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் இல்லை.

2022 ஆம் ஆண்டில், பாகிஸ்தான், மேற்பரப்பு முதல் மேற்பரப்பு வரையிலான இடைநிலை ஏவுகணையான ஷாஹீன்-III ஐயும், 2023 ஆம் ஆண்டில், இடைநிலை ஏவுகணையான கௌரியையும் வெற்றிகரமாக

பாகிஸ்தான் இத்தகைய ஏவுகணைகளை உருவாக்குவது அதன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இருப்பினும், அமெரிக்கா பாரபட்சமாக தங்களுக்கு எதிராக இது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. (நி)

---

இருப்பினும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்த காலப்பகுதி போதாது எனக் கூறியுள்ளனர்.

நாய் இறைச்சி உண்ணும் முக்கிய நாடாக மாறியுள்ள தென் கொரியா, 2027 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மனித நுகர்வுக்காக நாய்களை வளர்ப்பது, வெட்டுவது மற்றும் விற்பனை செய்வதைத் தடை செய்யும் சட்டங்களை இயற்றியுள்ளது.

சட்டத்தை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது 30 மில்லியன் கொரிய வோன் (சுமார் 22,800 டொலர்) வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவித்துள்ளது.


நாய் இறைச்சியை உட்கொள்வது குற்றமாகக் கருதப்படாவிட்டாலும், அது தொடர்பான அனைத்து வணிக நடவடிக்கைகளும் சட்டவிரோதமாகக் கருதப்படுகின்றன.

தற்போதுள்ள நாய் இறைச்சி பண்ணைகள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் உணவகங்கள் மூன்று வருட மாற்ற காலத்திற்குள் தங்கள் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்.

மேலும் அவற்றின் நிலை மற்றும் மூடல் திட்டங்களை உள்ளூர் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டிய தேவைகள் உள்ளன என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி)

---

## 3,000 கார்களுடன் தீப்பிடித்த சரக்குக் கப்பல் கடலில் மூழ்கியது



(அலாஸ்கா)

சீனாவின் யந்தாய் துறைமுகத்தில் இருந்து, வட அமெரிக்க நாடான மெக்சிகோவுக்கு "மார்னிங் மிடாஸ்" என்ற சரக்குக் கப்பல், 22 ஊழியர்களுடன் மே, 26இல் புறப்பட்டது. இதில், 70 மின்சாரக்கார்கள் உட்பட 3,000 புதிய கார்கள் இருந்தன.

அமெரிக்காவின் அலாஸ்காவுக்கு தென்மேற்கே 490 கி.மீ துாரத்தில் பசுபிக் கடலில் சென்றபோது, இந்தக் கப்பலில் திடீரென தீப்பிடித்தது.

இதையடுத்து சரக்குக் கப்பலை அப்படியே விட்டுவிட்டு, கப்பல் ஊழியர்கள் தப்பினர். இவர்களை, கடலோரக் காவல் படையினர் மீட்டனர்.

தீயை அணைக்கும் பணியில் அமெரிக்க கடலோர காவல் படை ஈடுபட்ட நிலையில், மோசமான வானிலை மற்றும் கப்பலில் நீர்க்கசிவு ஏற்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் மார்னிங் மிடாஸ் கப்பல் கடலில் மூழ்கியது. இதைக் கப்பல் நிறுவனமான லண்டனை சேர்ந்த "சோடியாக் மேரி டைம்" உறுதி செய்துள்ளது.

எனினும் அந்த கப்பலில் இருந்த 3000 கார்கள், அதில் இருந்து மீட்கப்பட்டதா என்பது தெரியவில்லை. (நி)

---

## கொலம்பியாவில் மண்சரிவு! 25 பேர் இதுவரை உயிரிழப்பு!



(கொலம்பியா)

கொலம்பியாவின் மலைப் பிரதேசமான பெல்லோவில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட திடீர் மண்சரிவில் சிக்கி இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த மண்சரிவில் மலை மீது கட்டப்பட்டிருந்த குடியிருப்பு கட்டுமானங்கள் உள்ளிட்டவை அடித்து செல்லப்பட்டன.

இதுகுறித்து தகவலறிந்த பேரிடர் மீட்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களை மீட்கும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மண்சரிவில் மண்ணுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களில் 10 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மண்சரிவில் பலர் காணாமல் போயுள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் எனவும் அஞ்சப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய தூதுவர் விஜிதஹேரத் சந்திப்பு!



(கொழும்பு)

இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜிதஹேரத் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் விஜித்ஹேரத் தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குத் தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளின் முக்கியத்துவத்தை அமைச்சர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

எந்தவொரு தீவிரப் போராட்டமும் இலங்கை உட்பட பிராந்தியத்திற்கும் அதற்கு அப்பாலும் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஈரானில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தூதருக்கு விளக்கியதாகவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>12இல்செவ்<br>கி-பா-29 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, Supervisor<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/15717 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: LLB,Tutor(London)<br>எதிர்பார்ப்பு: Only London<br>தொ.இ: G/15724 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்:6'2"<br>தகைமை/தொழில்-Degree,Retail Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15718 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-அத்தம்<br>1இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Dip in IT, BBA (Reading)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15731 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>7இல்செவ்<br>கி-பா:31<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:BA Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15722 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-அவிட்டம்<br>கி.பா -24<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSc,Bed,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.வெளிநாடு<br>தொ.இ: G/15732 |
| பிறப்பு: 1979- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா: 23<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்-A/L,Business(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15725 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>1 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் - Management, Manager(Swiss)<br>எதிர்பார்ப்பு: IT Field. ஆங்கில அறிவு<br>தொ.இ: G/15733 |
| பிறப்பு: 1988- இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி-பா- 35 1/4<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: Dip in IT, London<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15726 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>7இல்செவ்<br>கி.பா -63<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - BSc,Msc, Administration & Accounting(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/15734 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் (403)



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கோபாலகிருஷ்ண பாரதியார்

நாகபட்டினத்திற்குப் பக்கத்திலே நரிமணம் என்கின்ற ஊர் இருககிறது. எண்ணெய் மணம் வீசும் என்ற பெருமையும் அந்த ஊருக்கு உண்டு. கொஞ்சக் காலத்திற்கு முன்னால் இசை மணம் வீசிய பெருமையும் அந்த ஊருக்கு உண்டு.

கோபாலகிருஷ்ண பாரதியார் அந்த ஊரிலே தான் பிறந்தார். ஒருதரம் அவர் சிதம்பரத்திற்குப் போய் இருந்தார். கோவில் சுவரிலே ஒரு சிலையைப் பார்த்தார். அந்த சிலையின் ஒரு கையிலே கடப்பாரை! இன்னொரு கையிலே மண்வெட்டி! அது நந்தனார் சிலை! அதைப்பார்த்துவிட்டுப் பரவசமடைந்தார். அதற்குப்பிறகு தான் அவர் சரித்திரத்தைப் பாடலாக எழுத வேண்டும் என்று தீர்மானம் செய்தார். எழுதியும் முடித்தார்.

காரைக்காலிலே ஒரு தடவை இவர், தான் எழுதிய நந்தனார் சரித்திரப் பாடல்களை காலட் சேபம் செய்துகொண்டு இருந்தார். இதைக் கேட்பதற்கு ஏகப்பட்ட கூட்டம்.

இரவு 8 மணிக்கு ஆரம்பித்தால் அடுத்த நாள் காலையிலே 5 மணிக்குத்தான் முடியும்.

பொது ஜனங்கள், வியாபாரிகள், அரசாங்க அதிகாரிகள் இப்படி எல்லாரும் அதைக்கேட்பதற்கு வருவார்கள்! அரசாங்க அதிகாரிகள் எல்லாம் இரவு முழுவதும் கண்முழித்து நாத்தனார் சரித்திரம் கேட்டுவிட்டு காலையிலே 10 மணிக்கு அலுவலகத்திற்குப் போனால் கண் சுத்த ஆரம்பித்துவிடும். தூங்கி வழிய ஆரம்பிப் பார்கள்.

அப்போது இருந்த வெள்ளைக்கார அதிகாரி இதைப் பார்த்தார். யாராவது ஒருவர் தூங்கினால் என்ன என்று விசாரிக்கலாம். ஒட்டு மொத்தமாக எல்லோரும் தூங்கும் போது என்ன செய்வது? அவருக்கு தலையே சுற்ற ஆரம்பித்துவிட்டது!

சரி என்னதான் விடயம் என்று கேட்போம் என்று ஒருத்தரைக் கூப்பிட்டுக் கேட்டார்.

"இந்த ஊருக்கு ஒரு பெரியவர் வந்திருக்கிறார். இரவு முழுவதும் காலட்சேபம் செய்கிறார். அதை எல்லாரும் கேட்டுவிட்டு வருகிறோம். அதுதான் இப்படி! என்றார் அவர்.

உடனே அந்த அதிகாரி என்ன செய்தார் தெரியுமா? ஆபீஸ் வேலைக்கு இடைஞ்சலாக இருக்கு என்று சொல்லி பொலிசிலே புகார் கொடுக்கவில்லை!

"அவ்வளவு பேரையும் மயங்க வைக்கிற அந்த சரித்திரம்தான் என்ன?" என்று விசாரித்தார்! உடனே அன்றைக்கு இரவு இடத் திற்குப் போய்ப் பார்த்தார் அவரும் அந்த ஆயிரக்கணக்கான ஜனங்களும். "இவ்வளவு பேரும் சுவாரஸ்யமாக இதை இரசிக் கிறதைப் பார்த்தால் நிச்சயமாக இது சிறந்த பாடல்களாகத்தான் இருக்க வேண்டும்" என்று முடிவு செய்தார். உடனே இதை நானே அச்சிட்டு புத்தகமாக போட்டுத் தருகிறேன்! என்றார் அந்த வெள்ளைக்காரர். அப்படியே செய்தார். அவர் பேர்! சிஸே.

இதுதான் நந்தனார் கீர்த்தனை அரகேறிய கதை. கோபால கிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் கீர்த்தனையை கேட்டுவிட்டு, ஒரு வெள்ளைக்கார அதிகாரியே தானாக முன்வந்து அதை அச்சிட்டுக் கொடுத்தார். இப்போது நம்மிலேயும் சிலபேர் பாட்டு என்று சொல்லி எதையாவது எழுதி வைத்துக்கொண்டு, அதை புத்தகமாக ஆவது உதவட்டுமே என்று!

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர். தவறாமல் கவிதை எழுதுவார். அவர் பேருக்கு முன்னால் தவறாமல் கவிஞர் என்று போட்டுக் கொள்வார். அவரிடம் சொன்னேன் ஒரு நாள்.

ஏன் சார். நம் முன்னோர்கள் எத்தனையோ பேர் இருந் திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கவிஞர் திருவள்ளுவர் என்றோ கவிஞர் கம்பர் என்றோ கவிஞர் கணியன் பூங்குன்றனார் என்றோ சொல்வதில்லை. நீங்கள் மட்டும் கவிதை எழுதும் போது கவிஞர் என்று போட்டுக் கொண்டீர்கள் என்றேன்.

அவர் மெதுவாக என்னிடம் வந்து...

"நான் கவிஞர் என்று போட்டுக் கொள்வதே, எதற்காக என்றால் நான் எழுதியிருப்பது கவிதை என்று மற்றவர்களுக்குத் தெரிய வேண்டாமா? அதற்காகத்தான்!" என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி-அரசாங்க அதிபர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக புதிதாக பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் கே.ஏ.என்.ரசீஹ குமார, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனை நேற்றைய தினம் காலை 9 மணிக்கு மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி, மீள்குடியேற்றம், மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தி மற்றும் காணி விடுவிப்பு தொடர்பாகவும் அரசாங்க அதிபருடன் விரிவாக கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி உடனிருந்தார்கள். (8-33)

## 'நீதிக்கான நீண்ட காத்திருப்பு'
### ஆவணப்படம் திரையிடலும் கருத்துப் பகிர்வும்



(மன்னார்)

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த "நீதிக்கான நீண்ட காத்திருப்பு" எனும் கருப்பொருளில் "காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க்கதை ஆவணப் படம் திரையிடலும்,கருத்துப் பகிர்வும் நேற்று வியாழக் கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இசைப்பிரியன் தயாரிப்பில் வெளியிடப்பட்ட நீதிக்கான நீண்ட நாள் காத்திருப்பு காணாமல் போனோரின் கண்ணீர்க்கதை ஆவணப்படம் மன்னாரில் வெளியிடப்பட்டது.

வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டத்திலும் குறித்த ஆவணப்படம் வெளியிடப்பட்டது.

இதன் போது உயிரிழந்த இசைப்பிரியனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, ஆவணப் படமும் திரையிடப்பட்டது. குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்பு, சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(8-285)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பல பக்த அடியவர்கள் புடைசூழ பக்திப்பூர்வமாக இடம்பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

**கிளிநொச்சியில்**

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் பாரவூர்தி விபத்து



(தருமபுரம்)

கிளிநொச்சி - குடமுருட்டிப் பாலத்திற்கருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் பாரவூர்தி ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்டுள்ளது.

முத்துராஜவெலவிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பூநகரி வீதியால் பயணித்த பாரவூர்தியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரியவருகின்றது.

விபத்தின் போது கொள்கலனில் இருந்த பெருமளவு டீசல் கசிந்து வெளியேறி விரயமாகியுள்ளது.

இந்த விபத்தினால், குறித்த டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதையடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறுவதாகவும், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை நிரப்பிச் செல்வதை அவதானிக்க முடிந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. (8-316)

**இலத்திரனியல் வெள்ளைப்பிரம்பு அறிமுகம்**

## வவு.தமிழ் ம.ம.வித்தியாலய மாணவர்களுக்கு ஆளுநர் பாராட்டு




(வவுனியா)

கண் பார்வை அற்றவர்கள் பயன்படுத்தும் மேம்படுத்திய வெள்ளைப் பிரம்பைக் கண்டுபிடித்த வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை சந்தித்து தமது புத்தாக்கம் தொடர்பில் தெரியப்படுத்தினர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த லின்டன் ஜெனிஸ் அறோன் அஜேய் மற்றும் திருச்செல்வம் செரவின் ஆகிய தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்களே மேற்கொண்டனர்.

கண் பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பை இலத்திரனியல் உபகரணங்களைக் கொண்டு பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்தி அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் இக்கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் கண்டுபிடிப்பு தொடர்பில் கண் மருத்துவ சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர். மு.மலரவன் தெரிவிக்கையில், வவுனியா பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலுக்கு அமைய மாணவர்களின் கண்டுபிடிப்பைப் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு உதவத் தயார் என தெரிவித்தார்.

இம் மாணவர்கள் இருவரையும் ஆளுநர் வாழ்த்தியதோடு இவ்வாறான புத்தாக்க கண்டுபிடிப்புகள் எமது மாணவர்கள் மத்தியில் இருந்து இன்னும் பல தோற்றம் பெற வேண்டும். அவை எமது மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். என கோரிக்கை விடுத்ததோடு, இம்மாணவர்கள் மேலும் இதனை மேம்படுத்திக் கண்பார்வை அற்றவர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆதரவு அளிப்போம் எனவும் தெரிவித்தார். (8)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 600 | 500 |
| தக்காளி | 350 | 350 | 280 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 450 | 300 | 450 |
| கரட் | 450 | 450 | 400 | 400 |
| பூசணி | 160 | 160 | 120 | 150 |
| புடோல் | 100 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 150-350 | 150-350 | 250-400 | 500 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 400 | 400 | 280 | 300 |
| கறிமிளகாய் | 500 | 500 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1100 | 1300 | 900 | 1200 |
| போஞ்சி | 650 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 30-100 | 30-80 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 250 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 120-170 | 150-200 |
| இராசவள்ளி | 700 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 500 | 500 | 450 | 500 |
| முள்ளங்கி | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 4
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 807



மதுராந்தகருக்கு ஆசை காட்டுவானேன்? கரிகாலரை இங்கே தருவித்து வீண் பிரயத்தனம் செய்வானேன்? என்னை அநாவசியமாக இங்கே வரவழைப்பானேன்?"

"அக்கா! என் தமையன் கந்தமாறனுக்கு அவரைப் பிடிக்கவில்லை.." "அழகாயிருக்கிறது! உன் தமையனா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான்? ஆனால் கந்தமாறன் தானே வந்தியத்தேவனைப் பற்றி உனக்குச் சொன்னான் என்றாய்? இங்கே அவனைக் கூட்டிக் கொண்டு வந்ததும் உன் தமையன் தானே?"

"ஆமாம், கந்தமாறன் தான் அவரைப் பற்றிச் சொன்னான். அந்தப்புரத்துக்கு ஒரு நாளைக்கு அழைத்துக் கொண்டும் வந்தான். ஆனால் பிற்பாடு அவன் மனம் மாறி விட்டது. அதற்குக் காரணமும் இருக்கிறது. தஞ்சாவூரில் என் தமையனை அவர் கத்தியால் குத்தி விட்டாராம், அக்கா! உங்கள் அரண்மனையிலே என் தமையன் காயத்தோடு படுத்துக் கிடந்தானாமே? உங்கள் அன்பான பராமரிப்பினால் தான் அவன் உயிர் பிழைத்து எழுந்தானே?"

"நான் செய்ததை உன் தமையன் அதிகப்படுத்திக் கூறுகிறான். அது போனால் போகட்டும் இப்போது நீ என்ன செய்வாய்? உன் மனத்தைக் கவர்ந்தவன் இப்படி உன் தமையனுக்கு விரோதியாகி விட்டானே?" "ஆனால் இவர் என்ன சொல்கிறார், தெரியுமா?

இவர் என்றால், யார்? அவர்தான்! நீங்கள் சற்று முன் பெயர் சொன்னீர்களே, அவர் தான்! கந்தமாறனை அவர் குத்தவேயில்லையென்று ஆணையிடுகிறார். வேறு யாரோ குத்தித் தஞ்சாவூர்க் கோட்டை மதில் ஓரத்தில் போட்டிருந்தார்கள் என்றும், அவர் எடுத்துக் கொண்டு போய்க் காப்பாற்றியதாகவும் சொல்கிறார்.

"இதை எப்போதடி அவர் உனக்குச் சொன்னார்?" நேற்றுத்தான்.." "நேற்று அந்த வந்தியத்தேவனை நீ நேரில் பார்த்தாயா, என்ன? அவனுடைய உருவெளித் தோற்றத்தைக் கண்டதாக அல்லவா கூறினாய்?"

"அதுதான் அக்கா எனக்கு ஒரே மனக் குழப்பமாயிருக்கிறது. நேற்று நான் பார்த்தது அவரா, அல்லது அவருடைய உருவெளித் தோற்றமா என்று தெரியவில்லை. நேற்று நடந்தவற்றை எண்ணினால், எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கிறது. அக்கா! சில சமயம் மனிதர்கள் செத்துப் போனால் அவர்களுடைய ஆவி வந்து பேசும் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?"இந்தக் கேள்வியைக் கேட்ட போது மணி மேகலையின் குரலில் அளவிலாத பீதி தொனித்தது.

நந்தினியின் உடலும் நடுங்கிற்று எங்கேயோ உச்சி முகட்டைப் பார்த்த வண்ணம் "ஆம் உண்மை தான்! அற்பாயுளில் மாண்டவர்கள் ஆவி அப்படி உயிரோடிருப்பவர்களை வந்து சுற்றும். ஒருவருடைய தலையை வெட்டிக் கொன்று விட்டவர்கள் என்றால், சில சமயம் தலை மட்டும் வரும். சில சமயம் உடம்பு மட்டும் தனியாக வரும். இன்னும் சில சமயம் இரண்டும் தனித்தனியாக வந்து, 'பழி வாங்கினாயா?' என்று கேட்கும்!" என்றாள்.


பிறகு மணிமேகலையைப் பார்த்து உரத்த குரலில், "அடி பெண்ணே! நீ எதற்காக இந்தக் கேள்வி கேட்டாய்! உன் காதலனுக்கு அப்படி ஏதாவது நேர்ந்திருக்கும் என்று பயப்படுகிறாயா? உன் மனதில் இந்தச் சந்தேகத்தை யார் கிளப்பி விட்டார்கள்?" என்றாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அதிர்ஷ்டம் எப்படியும் வரும்



(நேற்றைய தொடர்ச்சி)

சந்தைக்கு அரை மைல் தள்ளி கையில் சேவலுடன் நடந்து வந்து கொண்டிருந்தான் முனியன், இப்பொழுது எதிரில் ஒருவன் வந்து கொண்டிருந்தான், அவன் முனியனை பார்த்ததும், முடிவு செய்து கொண்டான். இவனை எப்படியும் ஏமாற்றி சேவலை பறித்துக்கொள்ள வேண்டும் என்று.

என்ன முனியா கையில் சேவலை பிடித்துக் கொண்டு போய்க் கொண்டு இருக்கிறாய்.

ஆமாண்ணே இந்த சேவலை கொண்டு போய் சந்தையில் விற்று, ஒரு தோட்டம் வாங்க என் மனைவியிடம் பணத்தை கொண்டு போய் கொடுக்க வேண்டும்.

என்ன முனியா சொல்கிறாய். ஒரு சேவலை விற்று தோட்டம் வாங்க முடியுமா?

அப்பொழுதுதான் முனியனுக்கு உண்மை புரிகிறது. ஆமாம், சேவலை விற்றால் அவ்வளவு பணம் கிடைக்காதே? கவலையுடன் நின்றான் முனியன்.

ஒன்றுக்கும் கவலைப்படாதே, உன் சேவலுக்கு பதிலாக இந்த சீட்டை வைத்துக் கொள். இதைக் கொண்டு போய் சந்தையில் இருக்கின்ற கடையில் காண்பித்தால் பணம் கொடுப்பார்கள். சொல்லி விட்டு தன் சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு சீட்டை கொடுத்து விட்டு, சேவலை வாங்கிக் கொண்டு, அப்பா ஒரு ரூபா கொடுத்து வாங்கின சீட்டுல ஒரு சேவலை ஏமாத்தி வாங்கிட்டோம், என்று மகிழ்ச்சியுடன் நினைத்துக் கொண்டே அங்கிருந்து விறு விறு வென நடந்து சென்று விட் டான்.

பாவம் முனியன் அந்த சீட்டைக் கையில் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று பயத்துடன் சந்தைக்குச் சென்று அங்கிருந்த ஒரு கடையில் காண்பித்து அண்ணா இதை காட்டினால் நிறையப் பணம் கிடைக்கும் என்று சொன்னார்கள் என அப்பாவியாய் கேட்டான்.

அந்த சீட்டை வாங்கி பார்த்தவன் ஒரு நிமிடம் இரு. என்று ஒரு பத்திரிக்கையை வாங்கி இரண்டையும் ஒப்பிட்டு பார்த்து தம்பி உன் லாட்டரி டிக்கெட்டுக்கு லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கு. வா வா. என்று பக்கத்திலிருந்த வங்கிக்கு அழைத்து சென்றான்.

வங்கியில் அந்த சீட்டை வாங்கிப் பதிவு செய்து கொண்ட வங்கி அதிகாரி லாட்டரியில் விழுந்த பணத்தை வங்கியில் வைத்துக் கொள்வதாக தெரிவித்தவர், நாளைக்கு உங்கள் மனைவியுடன் வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். முனியன் கடைக்காரருக்கும், வங்கி அதிகாரிக்கும் நன்றியைத் தெரிவித்து விட்டு மீண்டும் தன்னுடைய ஊருக்கு திரும்பினான்.

வீட்டுக்கு வந்த கணவன் வெறும் கையுடன் வந்திருப்பதை கண்ட முனியனின் மனைவி அவனைத் திட்டினாலும், அவன் நடந்த விடயங்களை சொல்லி முடித்த பின்னால், மிகவும் மகிழ்ந்து, நாளைக்கே போய் கொஞ்சம் பணம் மட்டும் எடுத்து இந்த தோட்டத்தை வாங்கிக் கொள்ளலாம். மீதிப் பணம் அந்த வங்கியிலேயே இருக்கட்டும். வேணும் என்கின்ற போது எடுத்துக்கலாம்.இப்ப சாப்பிட வாங்க என்று அழைத்து சென்றாள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீ ஊமையாக இருக்கும் வரை உலகம் செவிடாய் தான் இருக்கும். – சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டு நிபுணர் குழு பகுப்பாய்வு செய்ய வேண்டும்

இலங்கைக்கு வருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் செம்மணிப் புதைகுழிப் பகுதிக்குச் சென்று நிலைமையை அவதானிக்க வேண்டும் என முன்கூட்டியே இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

உண்மையில் செம்மணி மனிதப் புதைகுழி உள்ள இடத்துக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நேரில் சென்று நிலைமையைக் கண்டறிந்தமை நீதி கிடைப்பதற்கு நிச்சயம் வழிவகுக்கும்.

அதேநேரம் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பில் நிறைவான ஆய்வுகளைச் செய்வதற்கு நிபுணத்துவக் குழுவை நியமிப்பது கட்டாயமானது.

இது விடயத்தில் அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் நிச்சயம் கருசனை கொள்ளும் என நம்பலாம்.

ஆம், செம்மணிப் புதைகுழியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதென்ற தகவல் எம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் காணாமல்போனவர்களின் உறவுகள் அதிர்ந்து போயுள்ளனர்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் யாருடையவை. எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டவர்களின் மரணம் எவ்வாறு சம்பவித்துள்ளது என்ற கேள்விகள் ஒவ்வொருவருடைய மனங்களையும் பிழிந்து கொண்டிருக்கின்றன.

எனவே மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் தொடருகின்ற அகழ்வுகளில் மீட்கப்படக்கூடிய எலும்புக்கூடுகள் சரியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.

எனவே இது விடயத்தில் வெளிநாட்டு நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றின் கீழ் ஆய்வுக்குட்படுத்துவது கட்டாயமானது.

அதேநேரம் குறித்த இடத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் நேரில் பார்வையிட்டதன் காரணமாக, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மேற்பார்வையின் கீழ் வெளிநாட்டு நிபுணத்துவக் குழு மேற்படி செம்மணி புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை மேற்கொள்வது சாலச் சிறந்தது.

இதுவிடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் சிவில் அமைப்புகள், புலம்பெயர் அமைப்புகள் உரக்கக் குரல் கொடுக்க வேண்டும்.

அதேசமயம் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்கு, செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை சர்வேதச அமைப்பின் முகதாவில் வெளிநாட்டு நிபுணத்துவக் குழு மூலம் ஆய்வுகளை மேற்கொண்டு உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவது அரசாங்கத்துக்கும் நன்மை பயப்பதுடன் வெளிப்படைத் தன்மைக்கும் அது பேருதவியாக அமையும்.

## காங்கேசன்துறை – கொழும்பு கடுகதி புகையிரத சேவை

### எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் தினசரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை - கொழும்பு குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி புகையிரத சேவையை எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் தினசரி சேவையாக கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலைய அத்தியட்சகர் ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களால் புகையிரதத் திணைக்களம் மற்றும் துறைசார் தரப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுவரைகாலமும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் குறித்த புகையிரதம் தனது சேவையை முன்னெடுத்து வந்தது.

இந்நிலையில் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் கல்கிசை புகையிரத நிலையத்திலிருந்து காலை 5.15 மணிக்கு தனது சேவையை ஆரம்பித்து, கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம் சென்று அங்கிருந்து 5.45 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படும். புகையிரதம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை மதியம் 11.49 மணியளவில் வந்தடையவுள்ளது. அதன்பின்னர் காங்கேசன்துறையை 12.13 க்குச் சென்றடையும்.

மீண்டும் பிற்பகல் 1.30 க்கு காங்கேசன்துறையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கும் குறித்த புகையிரதம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்து, அங்கிருந்து 2.12 க்குப் புறப்பட்டு கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தை இரவு 8.33 க்குச் சென்றடையும். அங்கிருந்து கல்கிசையை இரவு 8.55 மணிக்குச் சென்றடையும்

இதேநேரம் குறித்த கடுகதி புகையிரத சேவைக்கான ஆசன முற்பதிவுகள் அடுத்த ஒரு சில தினங்களில், புகையிரத திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்தில் முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரைகாலமும் 5.45 க்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவி புகையிரதமானது எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் காலை 6.35 மணிக்கு தனது சேவையை ஆரம்பிக்கும் எனத் தெரிவித்தார். (ம-7,33,104)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை தமிழரசுக் கட்சி வசமானது

### தவிசாளரானார் சின்னராசா லோகேஸ்வரன்

கரைதுறைப்பற்று பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக சின்னராசா லோகேஸ்வரன் தெரிவானார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு நேற்றுக் காலை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காகத் திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு வாக்கெடுப்பு இடம் பெற்றது.

இந்நிலையில் இருபத்தொரு உறுப்பினர்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் பதினொரு வாக்குகளையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் நான்கு வாக்குகளையும் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஐந்து வாக்குகளையும் பெற்றதோடு இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா நடுநிலைமை வகித்தார் இந்நிலையில் இலங்கைத் தமிழரசு கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

இதேவேளை உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன் சுயேட்சை குழுவாக போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா ஆகியோரது பெயர்கள் முன்மொழிபட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன் ஒன்பது வாக்குகளையும் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா ஆறு வாக்குகளையும் பெற்றுக்கொள்ள ஆறு உறுப்பினர்கள் நடுநிலமை வகித்தனர் இதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன் உபதவிசாளராக அறிவிக்கப்பட்டார். (ம-7,299)

தொண்டைமானாற்றுக்கடலில் விடப்பட்டது

## செம்மணியில் ஏற்றப்பட்ட அணையா விளக்கு

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் கடந்த மூன்று நாட்களாக எரிந்து கொண்டிருந்த அணையா விளக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை தொண்டைமானாற்றுக் கடலில் விடப்பட்டது.

செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரி கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வளைவுக்கருகில் அணையா விளக்கு ஏற்றப்பட்டு தொடர்ச்சியாக மூன்று நாட்களாக தீபம் அணையாது போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூன்றாம் நாளான நேற்று முன்தினம் புதன் கிழமை மாலையுடன் போராட்டம் நிறைவு பெற்றதனையடுத்து அணையா விளக்கு தொண்டமனாற்றுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கடல் நீரில் விடப்பட்டது.

மூன்றாம் நாள் போராட்டமான நேற்று முன்தினம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் நேரில் வருகை தந்து அணையா விளக்கு முன் நின்று வணங்கி மலரஞ்சலி செலுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## துணுக்காய் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி

### தவிசாளராக க.செந்தூரன் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நேற்றுப் பகல் 11.30 மணிக்கு துணுக்காய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட இச் சபையில் தமிழரசுக் கட்சி சார்பில் கனகரத்தினம் செந்தூரன் அவர்களும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் சிவகுமார் சிந்துஜன் ஆகியோரின் பெயர்கள் தவிசாளர்களாக முன்மொழியப்பட்டது.


இந்நிலையில் பகிரங்க வாக்கெடுப்பு இடம் பெற்றது. இதன்போது தேசிய மக்கள் சக்தி சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர் ஒருவரும் சுயேட்சைக்குழுவின் ஊசி சின்னத்தில் போட்டியிட்ட உறுப்பினர் ஒருவரும் நடுநிலைமை வகித்தனர்.

தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கனகரத்தினம் செந்தூரன், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஒரு உறுப்பினரும், சுயேட்சைக்குழு கங்காரு சின்னத்தில் வெற்றி பெற்ற ஒரு உறுப்பினரதும் ஆதரவுடன் 06 வாக்குகளையும் சி.சிந்துஜன் 05 வாக்குகளையும் பெற்ற நிலையில் தமிழரசுக் கட்சி சார்பில் கனகரத்தினம் செந்தூரன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-7,315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 15

புருசோத்தமன்



பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி புதுச்சேரியில் பலம் பொருந்தியதாக இருப்பதைக் காண முடிகிறது.


அதேநேரம் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பனவும் புதுச்சேரி மாநிலத்தில் தங்கள் இருப்பை நிலை நிறுத்துவதில் அதீத கவனம் செலுத்துகிறது என்பதை அங்கு வைக்கப்பட்டுள்ள கட்சிப் பதாகைகள் உறுதி செய்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, மறைந்துபோன அரசியல் தலைவர்களின் பிரமாண்டமான உருவச் சிலைகள் மிகத் தத்ரூபமாக செதுக்கப்பட்டு, முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளமை புதுச்சேரி மாநிலத்தின் மக்கள் எத்துணை தூரம் நன்றி உடையவர்கள் என்பதைச் சான்றுப்படுத்தும்.

அதேநேரம் தமிழ் மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் அந்த மக்கள் கொண்ட நாட்டமே பாரதியார் , பாரதிதாசன் போன்ற தமிழ்ச் சான்றோர்களை புதுச்சேரி மாநிலம் கொண்டாடுவதற்கு மூல காரணம் எனலாம்.

அதே சமயம் பாரத தேச விடுதலையில் எங்ஙனம் தமிழ் நாடு முதன்மை பெற்றதோ அதுபோல புதுச்சேரியும் தனது தேசத்தின் சுதந்திரத்தில், இறையாண்மையில், சுயநிர்ணயத்தில் மிகவும் பற்றுறுதியுடன் இருந்துள்ள தென்பதை புதுச்சேரி நகராட்சியின் கடலோரத்தில் கம்பீரமாகக் காட்சி தரும் நினைவாலயம் சாட்சியமாகும்.

ஆக, ஒட்டு மொத்தத்தில் தனக்கென தனி மாநில அரசு, தனிப் பொலிஸ் அதிகாரம்,



புதுச்சேரியில் உள்ள நினைவுத்தூபி

தனித்துவமான பொருளாதார முதலீடுகள், பிரமாண்டமான விடுதிகள், உல்லாசப் பயணிகளை ஈர்க்க வல்ல சுற்றுலாத் தளங்கள், ஆன்மீக சுகத்தைத் தர வல்ல திருக்கோவில்கள், ஊருக்கு அழகு தரவல்ல ஆறுகள், மலைத் தொடர்கள், சமதரைகள் என்பவற்றுடன் பிரான்ஸ் நாட்டின் கட்டிடக் கலைகள், நீண்டதும் நெடியதுமான பழங்காலத்துக் கட்டடங்கள், கம்பன் கழகம் போன்ற தமிழ் வளர்க்கும் அமைப்புகள் அதிலும் மாநில அரசின் முழு ஆதரவோடு வருடம் தோறும் நடக்கின்ற கம்பன் விழாக்கள் என எல்லாச் சிறப்பும் பெற்ற புதுச்சேரி மாநிலம் கம்பன் காட்டும் அயோத்தி மாநகருக்கு ஒப்பானதாய் இருப்பதைக் கண்டு பேருவகை அடைந்தேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் காரணமாக புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் உயரிய கம்பன் விழாவில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்ததென்பதை இவ்விடத்தில் பதிவிடுவது கட்டாயமானது.

அதேபோன்று புதுச்சேரிக் கம்பன் விழாவில் பங்கேற்ற கொழும்புக் கம்பன் கழகத்தின் பலமாக இருக்கின்ற மருத்துவர் ஸ்ரீஇரத்தினகுமார், கம்பவாரிதியின் அணுகத் தொண்டராக இருக்கும் கம்பநேசன் வாசுதேவா ஆகியோரின் ஆளுமை, அவர்கள் புதுச்சேரியில்




உள்ள சான்றாண்மைப் பெருமக்களுடன் கொண்டுள்ள உறவுநிலை என்பனவெல்லாம் எம்மை வியக்க வைத்தன.

அதிலும், பயண ஏற்பாடுகளின் போது மருத்துவர் ஸ்ரீஇரத்தினகுமார் அவர்களின் ஒழுங்கு படுத்தல்கள், முன்னாயத்தங்கள் அவரின் திட்டமிடல் பண்பின் ஆளுமையைத் துலாம் பரப்படுத்தின.

புதுச்சேரிப் பயணம் சென்னை விமான நிலையத்தில் முற்றுப் பெறுகிறது.

சென்னை விமான நிலையத்தில் உள்ள ஆடும் நடராஜப்பெருமானின் திருக்கோலம் என் இதயத்தை நெகிழ வைத்தது. கூடவே அந்த இடம் புனிதப்படுகிறது.

சென்னை விமான நிலையத்தின் புறப்பாட்டு வரிசையில் கடவுச் சீட்டைக் கொடுத்த போது, இந்தியாவுக்கு வந்ததன் நோக்கம் பற்றிய தொடர் கேள்விகள் வித்தியாசம் மட்டுமல்ல விசித்திரமாகவும் இருந்தது.

வழமையில் உள்நுழையும் போது எழுப்பப்படும் கேள்விகள் இங்கு வெளியேறும் போது வெளிக்கிட்டது தான் வித்தியாசத்திற்கும் விசித்திரத்திற்கும் காரணமாயிற்று.

அந்த கேள்விகளின் நினைப்பு என்னுள் மீள எழ, சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் கொழும்பு கட்டுநாயக்கவின் ஓடு பாதையில் தரையிறங்கிற்று.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழையில்...

கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இணுவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த சசிக்குமார் ஜீவன்சன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞனுக்கு தெல்லிப்பழைப் பகுதியிலும் ஒரு வீடு உள்ளது. இந்நிலையில் குறித்த இளைஞன் நேற்று முன்தினம் தந்தையின் மரக்காலைக்குச் செல்வதாகத் தாயிடம் கூறிவிட்டு தெல்லிப்பழையில் உள்ள வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பின்னர் அங்கு தொட்டியினுள் தண்ணீர் நிரப்பிவிட்டு நீச்சலடித்துள்ளார். இதன்போது அவருக்கு வலிப்பு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மகனைக் காணாத நிலையில் பெற்றோர் அவரைத் தேடிய வேளை அவரது சடலம் தண்ணீரில் மிதந்தவாறு காணப்பட்டது.

சடலமானது மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைகளுக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

## கிணற்றில்...

இதில் அச்சுவேலி அரசடி தோப்புப் பகுதியைச் சேர்ந்த பிரதீபன் தச்ஷன் (வயது-10) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

மேற்படி சிறுவன் தனது பேரனுடன் தோட்டத்துக்குச் சென்றுள்ளார். பேரன் நீர் இறைத்துக் கொண்டிருக்கும்பொழுது, கிணற்றில் கலர் மீன்களைப் பிடிக்க இவர் முயற்சி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாளியினைக் கிணற்றில் விட்ட பொழுது கயிற்றில் கால் சிக்குண்டு கிணற்றிற்குள் விழுந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,33)

## தமிழரின்...

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை உறுதியாக இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, மத்திய கிழக்கு உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் நிலவும் பிரச்சினைகளால் எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கைத் தமிழர் பிரச்சினை நீர்த்துப் போகாமல் இருப்பதற்காகவே தான் நேரடியாக இங்கு வந்ததாக வோல்கர் டேர்க் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கூறியுள்ளார்.

மேலும் மனித புதைகுழிகள் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக குறித்த சந்திப்பில் பேசப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மிக மோசமாக அரசாங்கம் நடக்காமல் இருப்பதற்கு ஜெனிவா தீர்மானங்களைத் தொடர்ந்து முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு வலியுறுத்தியதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சித் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## மனித உரிமை...

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தனது முழு ஆதரவையும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் புதிய அரசியல் மற்றும் சமூக மாற்றத்தைப் பாராட்டிய உயர்ஸ்தானிகர், வடக்கு மற்றும் தெற்கில் உள்ள அனைத்து மக்களும் தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயத்தின் போது இலங்கையில் நடைபெற்று வரும் புதிய மாற்றம் குறித்து தெளிவான புரிதலைப் பெற முடிந்ததாகத் தெரிவித்த வோல்கர் டேர்க், இன்று நாட்டின் அனைத்து மக்களும் சிறந்த எதிர்காலத்திற்கான புதிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர் என்று தான் நம்புவதாகவும் கூறினார்.

காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வடக்கு மற்றும் தெற்கில் காணாமல் போனவர்களின் உறவினர்களின் வேதனைகள் ஒரே மாதிரியானவை என்றும் அவர்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் நிறைவேறும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எதிர்பார்க்கிறது என்று உயர்ஸ்தானிகர் மேலும் கூறினார்.

தற்போதைய அரசியல் கலாசாரம் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயற்படத் தவறியுள்ளதால் காணாமல் போனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தி மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினையை அனுபவ ரீதியாக எதிர்கொண்ட ஒரு அரசியல் இயக்கமாக தனக்கு அது தொடர்பான புரிதல் இருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கும் தனது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5872 — R 8 1 3 9 4 3
அத சம்பத — R 3 9 4 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0447
தன நிதானய — திகதி -2025.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1902 — L 24 25 27 41 L — Double Chance 48150
மெகா பவர் — திகதி 26/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2220 — O 15 04 18 60 62
ஜய — திகதி 2025.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0140 — X 3 5 0 2
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4114 — சீட்டிழுப்பு திகதி 26.06.2025 — L 03 19 69 75 — L
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1181 — மீனம் 30 47 57 60 மீனம் — 93210 — 33
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 26.06.2025 — வெற்றி வாரம் 580 — K 9 7 2 4 9 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,006,186.40 — 66593
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2846 — சீட்டிழுப்பு திகதி 2025.06.26 — தினம் வியாழக்கிழமை — 21 26 56 66 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,972,483.20
சனிதா — திகதி 26.06.2025 — வெற்றி வாரம் 5007 — 19 64 69 80 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,385,592.80 — 85772
சசிரி — வெற்றி வாரம் 712 — சீட்டிழுப்பு திகதி 26.06.2025 — வியாழக்கிழமை — 06 42 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.3,178,520.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4558 — சீட்டிழுப்பு திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை — 10 37 38 57 — சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,087,187.60 — 185547
லக்ன வாசனா — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — D 30 03 13 34 45 — 2022 — 26.06.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,628,492.20
அத கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2672 — சீட்டிழுப்பு திகதி 2025.06.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,375,268.00 — 07 12 34 59 V — 635863


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 எலும்பு...

செம்மணி, சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வுகள் இடம்பெற்றன. மூன்று குழந்தைகளின் மனித எச்சங்கள் உட்பட 19 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் புதைகுழி மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத் தால் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் 45 நாட்களுக்கு இரண் டாம் கட்ட அகழ்வுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கி இருந் தது. இதன்படி அகழ்வுகளுக்கான செலவீனப் பாதீடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கான நிதி ஒதுக் கீடுகள் கிடைக்கப்பெறும் என்ற உத்தரவிற்கு அமைய நேற்று வியா ழக்கிழமை (26) இரண்டாம் கட்ட அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று குழந்தையின் மண்டை யோட்டுத் தொகுதி உட்பட மூன்று மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

நேற்றைய தினத்துடன் இதுவரை 22 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 45 நாட்களுக்கு பாதீட்டு அளவு உள்ளதால் முதல் 15 நாட் களுக்கு அகழ்வு பணிகள் சிறிய இடைவெளி விட்டு மீண்டும் தொடர்ந்து நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-7,33)

## பயங்கரவாத...

செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இந்தக் கருத்தை வெளி யிட்டார்.

இந்த விவகாரம் குறித்து அரசாங் கத்துடன் விவாதித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைக் கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்கு மாறு கோரியதாகவும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஒரே பாலின திருமணத்தை குற்ற மற்றதாக்க முன்மொழியும் தற்போ தைய மசோதா மிக விரைவில் நிறை வேற்றப்படும் என்று நம்புகிறேன்.

மேலும் நிகழ்நிலை, ஊடக பாது காப்புச் சட்டம் இரத்து செய்யப்பட வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மீண்டும் தொடங்கு வது ஒரு நேர்மறையான நடவடிக்கை என்றும் கூற வேண்டும்.

மேலும், பாதுகாப்பு மற்றும் பொலிஸ் துறை சீர்திருத்தங்கள் மிக வும் முக்கியமானவை என்றார். (ம-7)

## மனித உரிமை...

விசாரணைப் பொறிமுறைமை அவ சியம்.

இந்த விசாரணைப் பொறி முறைமை சர்வதேச நியமங்களுக்கு உட்பட்ட வகையில் அமையப்பெற வேண்டும் இவ்வாறான ஓர் பொறி முறைமையை உருவாக்குவதற்கு இலங்கை சர்வதேச ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள வேண்டுமென தெரி வித்துள்ளார். (ம-7)


**வேலையாட்கள் தேவை**

♦ **கணக்காளர்**
களஞ்சிய கணக்குகளை சரிபார்க்கவும் இருப்புகளை சரிபார்க்கவும் கணக்காளர் தேவை.

♦ **வாகன உதவியாளர்கள்**
பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர் தேவை.

நேரில் வரவும்
காலை 9.00 Am – 3.00 Pm
தொடர்புகளுக்கு :
**077 009 0189**
இராமகிருஷ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (4643)

**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**
5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237 (C-3277)

**உடனடி வேலை வாய்ப்பு**
**நிர்வாக உத்தியோகத்தர்**

**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**
**V2 TRAVELS**
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3277)

**வேலையாட்கள் தேவை**
உடுவில் பகுதியில் இயங்கிவரும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் தோட்ட பராமரிப்பு வேலை செய்யக் கூடிய ஒருவர் தேவை.
வயது எல்லை 35
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
**075 763 6911** (4642)

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் நகர்ப் பகுதியில் பிரதான வீதியில் இருந்து 100m தூரத்தில் அமைதியான சூழலில் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்புகளுக்கு :
**076 248 6753** (1264)

**குத்தகைக்கு**
சாவகச்சேரி அல்லாரையில் 1 ஏக்கர் காணி உடனடியாக நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
பசு மாட்டு பண்ணைக்கான கட்டட வசதிகளுடன்.90 தென்னைமரங்கள்.
25 TJC மாமரங்கள் காய்க்கும் நிலையில் உள்ளன.
**077 768 7821** (1265)

**1ம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில் 25 . 06 . 1941
இறைவன் அடியில் 07 . 07 . 2024

அமரர் Dr. **கந்தையா பாலசுப்பிரமணியம் (Dr.பாலா)**

ஆண்டு ஒன்று ஆனதப்பா இன்றோடு
நேற்றுப்போல் இருக்கிறது உங்கள் பிரிவு
ஆனாலும் எம்மனமோ ஏற்க மறுக்கிறது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் மனதில் நீங்கள்தான் காவியநாயகன்
காலம் எல்லாம் காத்திருக்கிறோம் எங்கள்
காவிய நாயகனின் அன்புக்காக
நீங்கள் சென்ற விண் உலகில்
அமைதியாக உறங்குங்கள்
என்றும் உங்கள் நினைவுகளோடு....

செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு, இணுவில். (1263)
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

**நன்றி நவிலல்**



**திருமதி கவிதா ஜெயக்குமார்**

கடந்த 30.05.2025 வெள்ளிக்கிழமை அன்று எங்கள் குடும்பத் தலைவி கவிதா ஜெயக்குமார் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயருற்றிருந்த வேளையில் எமக்கு ஆறுதல் கொடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அந்த வகையில் எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியையில் எங்களுக்காக நேரம் ஒதுக்கிய அன்புள்ளங்களுக்கும், வார்த்தைகளாலும், செயல்களாலும் ஆதரவு வழங்கி உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், கோண்டாவில் இந்துக் கல்லூரி பாடசாலைச் சமூகம், அத்தியார் இந்துக் கல்லூரி பாடசாலைச் சமூகம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 92 O/L, 95 A/L பழைய மாணவர் அணியினர், இசை ஆசிரியர்கள் கழகம், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்கள், நினைவு அஞ்சலிகளைப் பகிர்ந்தோர், உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து தொலைபேசி வாயிலாக அழைப்புக்களை மேற்கொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறியோர், காலத்தின் தேவையறிந்து சிற்றுண்டிகளைப் பரிமாறியோர் மற்றும் பிற அனைத்துச் செயற்பாடுகளிலும் உறுதுணையாக நின்று உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (4647)

077 735 8399
074 024 2596
இங்ஙனம் :
குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org